2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது நீக்கப்படுகிறது. வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

4. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)—ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 11–வது கூட்டத்தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:*

1. *திரு. அ. பாப்பா சுந்தரம்*
2. *திரு. ஓ.கே. சின்னராஜ்*
3. *திரு. கே.பி. அன்பழகன்*
4. *திரு. ஆர். சின்னசாமி*
5. *திரு. பி.ஜி. நாராயணன்*
6. *முனைவர் செ.கு. தமிழரசன். (குறுக்கீடுகள்)*

5. தகவல் கோரல்

(அ) ஜல்லிக்கட்டை மீண்டும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மு.க. ஸ்டாலின், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திலே உங்கள் கட்சி உறுப்பினருக்குப் பேச வாய்ப்பு இருக்கின்றது அல்லவா? (குறுக்கீடு) சரி, நீங்கள் சொல்லுங்கள்.*

***திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுடைய பண்பாட்டு விளையாட்டாக இருக்கக்கூடிய ஜல்லிக்கட்டு குறித்து சட்டமன்றத்தில் ஒரு சிறப்புத் தீர்மானம் . . .*

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசலாம். திரு. ஸ்டாலினுக்குத் தெரியாதது இல்லை. கவர்னர் உரைமீதான விவாதத்தில் இதையெல்லாம் நீங்கள் பேசலாம். உங்கள் கட்சி உறுப்பினர் இன்று பேசுகின்றார், அவர் பேசலாம். (குறுக்கீடு) இல்லை, இதை நீங்கள் zero hour–ல் raise பண்ண வேண்டிய அவசியம் இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இந்த மாதிரி allow பண்ணுகின்ற பழக்கம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, கவர்னர் உரையில் நீங்கள் பேசும்போது பேசலாம், உட்காருங்கள். நீங்கள் வேறு ஏதாவது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றைப் பேசுவீர்கள் என்றுதான் அனுமதித்தேன். (குறுக்கீடுகள்) இதையெல்லாம் உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது பேசலாம். (குறுக்கீடுகள்) இல்லை, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நீங்கள் பேசலாம். (குறுக்கீடுகள்) இப்போது வாய்ப்பு இல்லை, அப்போது நீங்கள் பேசலாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது உங்கள் கட்சி உறுப்பினர் பேசவிருக்கிறார். அப்போது என்ன பேச வேண்டுமோ, அதைப் பேசச் சொல்லுங்கள். அனுமதியில்லை.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு என்கிற நம்முடைய பாரம்பரிய விளையாட்டு விஷயத்தில் முன்பு இருந்த காங்கிரஸ் தலைமையிலான அரசு, திராவிட முன்னேற்றக் கழகம் உடனிருந்த அந்த அரசு ஜல்லிக்கட்டு நடைபெறாமல் இருப்பதற்குரிய நடவடிக்கையை எடுத்தது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு பெரிய உரை நிகழ்த்துவதுபோல பேச வேண்டாம். இரண்டொரு வார்த்தையில் பேசி முடியுங்கள்.

2016 ஜனவரி 21]

திரு. அ. சவுந்தரராசன்: *ஆகவே, ஜல்லிக்கட்டை நாம் மீண்டும் நடத்துவதற்குரிய நடவடிக்கையை மத்திய அரசாங்கம் எடுக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை அவையில் நிறைவேற்ற வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், அவையில் நீங்கள்தான் விவாதத்தில் பேசப் போகின்றீர்களே? (குறுக்கீடு) நீங்கள்தானே பேசப் போகின்றீர்கள்? (குறுக்கீடு) அப்போது பேசலாம் அல்லவா?*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு ஆகியவை தமிழ்நாட்டினுடைய பாரம்பரியமான பண்பாட்டுக் குறியீட்டு விளையாட்டுகள். எனவே, மத்திய அரசு, வன விலங்குப் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து காளையை நீக்கி, அதை நடத்துவதற்கு வலியுறுத்தி உரிய ஒரு சிறப்புத் தீர்மானத்தை சட்டமன்றப் பேரவை இயற்ற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, என்னவென்று சொல்லுங்கள்?*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலங்குகளைப் பாதுகாக்கின்றோம் என்ற பெயரிலே தமிழக மக்களுடைய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு ஏற்பட்டு உள்ள தடையை நீக்கக்கூடிய வகையில் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனித நேய மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்னவென்று சொல்லுங்கள்?*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், மயிலாடுதுறை அருகே திருநாள்கொண்டசேரி என்ற கிராமத்தில் 70 வயது நிரம்பிய ஒரு முதியவர் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்போது வாய்ப்பு இல்லை. அதையெல்லாம் நீங்கள் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசும்போது பேசலாம். (குறுக்கீடு)*